சுப்பர் சன்றே பாட்டா
இளைஞர்களின்
நகர நடமாட்டத்திற்குரிய
அனாயாச எழில்...
ஆண்களுக்கான இன்றைய
தெரிவு சுப்பர் சன்றே.
நகரில் தாராளமாகக்
கிடைக்கிறது.
சி. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆவணி 27 ஷவ்வா: 8 இதழ்: 213
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 12-9-78

வெஸ்பா VESPA
உலகதரமிக்கது
இம்மாதம் முடிவில்
இறக்குமதியாகும்
கூட்டர்களுக்கு
இன்றே பதிவு செய்யுங்கள்
எண்ணுக்கு ஏற்ற நிறம்...
மனதுக்கு ரம்மியம்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

பரராசா துப்பாக்கிச்சூடு நஷ்ட ஈடு வழக்கு:

44,000 ரூபா நஷ்ட ஈடு

வழங்குமாறு நீதிபதி தீர்ப்பு!

(யாழ்ப்பாணம்)

செம்மணி பரராசா துப்பாக்கிச்சூட்டு நஷ்டஈட்டு வழக்கில் மனுதாரான பரராசாவின் தந்தைக்கு எதிர்மனுதார்களான சட்டமாஅதிபரும் கான்ஸ்டபிள் ஸ்ரான்லியும் தனித்தும் ஒருமித்தும் 44,000 ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டும் என்று நேற்று யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் தீர்ப்பளித்தார்.

சட்டமாஅதிபர், கான்ஸ்டபிள் ஆகியோர்மீது, தமது மகன் பரராசா கொலையுண்டதன் காரணமாக தனித்தும் ஒருமித்தும் 50,000 ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டுமெனக் கோரி பரராசாவின் தந்தையான சி. பொன்னம்பலம் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுதார் சார்பில் சட்டத்தரணி எஸ். நடேசன் கியூ. சி., சட்டத்தரணி கே. கந்தசாமி, சட்டத்தரணி எஸ். நாகராஜா, சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி வி. யோகேஸ்வரன் ஆகியோர் விசாரணையின்போது ஆஜரானார்கள்.

1ம் எதிர்மனுதாரான சட்டமாஅதிபர் சார்பில் அரச சட்டத்தரணி பி. ஞானகரன், சட்டத்தரணி எஸ். கனகரத்தினம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2ம் எதிர்மனுதாரான கான்ஸ்டபிள் ஸ்ரான்லி நீதிமன்றத்தில் சமுகமளிக்கவில்லை. அவர் சார்பில் சட்டத்தரணி எவரும் ஆஜராகவில்லை.

துப்பாக்கிச் சூடு

நாவற்குழி வாசியும், சாவகச்சேரி மக்கள் வங்கி ஊழியருமான பொன்னம்பலம் பரராசா 1976ம் ஆண்டு ஆகஸ்ட் 10ம் தேதி நல்லூர்க் கந்தசுவாமிகோவில் மஞ்சத்திருவிழாவன்று சயிக்கிளில் வந்து கொண்டிருந்தபோது துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானார். அதே இடத்தில் இ. போ ச. பஸ் ஒன்று எரிந்ததுதொடர்பாக பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

மரணவிசாரணை நடத்திய அப்போதைய யாழ்ப்பாண நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் விசாரணையின்பின் காரணம்காட்ட முடியாத கொலை எனத் தீர்ப்பளித்திருந்தார். சந்தேகநபரான கான்ஸ்டபிள் ஸ்ரான்லியை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

கொலைக் குற்றச்சாட்டு

சட்டமாஅதிபரின் உத்தரவின்பேரில் அவர் பின் ரிமாண்டிலிருந்து விடுதலைசெய்யப்பட்டார். ஆயினும் பின்னர் கான்ஸ்டபிள் ஸ்ரான்லிமீது அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு தாக்கல்செய்யப்பட்டது.

இவ்வழக்கு பின்னர் சாட்சி

[6-ம் பக்கம் பார்க்க]

"ஈழத் தமிழரை பிரிக்கும் முயற்சி"

தமிழக ஏடு கருத்து

சென்னை, செப். 11

"இலங்கையில் உள்ள தமிழர்களை பிரிக்கும் முயற்சியில் திரு. சௌ. தொண்டமானுக்கு இலங்கை அரசு மந்திரிப் பதவி வழங்கியுள்ளது" என்று தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் 'முரசொலி" பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது

அப்பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது:

"இலங்கையிலுள்ள தமிழ் மக்களை ஈழத்தமிழர்கள், இந்தியத்தமிழர்கள் என்றுபிரித்து திரு. சௌ. தொண்டமானுக்கு புதியஅமைச்சொன்றை உருவாக்கி அவர் அமைச்சராக்

[6-ம் பக்கம் பார்க்க]

வீடுகளில் பொலிஸ் சோதனை இளைஞர்கள் மீதும் விசாரணை

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி தொகுதியில், சில வீடுகள் நேற்று, பொலிசாரினால் சோதனையிடப்பட்டதுடன் சில இளைஞர்கள் விசாரணைக்குட்படுத்தப் பட்டனர்.

யாழ்ப்பாணத்திலும் சில வீடுகளும் வர்த்தகநிலையங்களும் சோதனையிடப்பட்டதுடன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சாவகச்சேரியிலும் சில வீடுகளை பொலிசார் சோதனையிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் நடந்த வன்செயல் தொடர்பாகவே வீடுகள் சோதனையிடப்பட்டு, இளைஞர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக தெரிய வருகிறது. (க)

பயங்கர ஆயுதங்களுடன் 3 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

மீசாலையில் பயங்கர ஆயுதங்களுடன் மூன்று இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்

இவர்களில் ஒரு சந்தேகநபர் கடந்த 2 வருடகாலமாக பொலிஸாரால் தேடப்பட்டுவந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது

இவர்களிடமிருந்து 2 ரிவோல்வர், 1 துவக்கு, ரொக்கப்பணம் ஆகியவற்றைப் பொலிஸார் கைப்பற்றினர்.

கோரிக்கை ஏற்கப்பட்டால்

தமிழ் தொழிற்சங்க கூட்டணியும் வேலைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தொழிற்சங்க கூட்டணியின் கோரிக்கையைத் தொழிற்சங்க கூட்டுச்சபை ஏற்கும்பட்சத்தில் இம்மாதம் 28ம் திகதி நடைபெறவிருக்கும் பொதுவேலைநிறுத்தத்தில் தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியும் கலந்துகொள்ளும்.

இதுசம்பந்தமான ஒரு தீர்மானம் கடந்தவாரம் வடபிரதேச தொழிற்சங்க கூட்டுச்சபையினருக்கும். தமிழ்த் தொழிற்சங்க கூட்டணியினருக்கும் தமிழ்த்தொழிற் சங்க பணிமனையில் நடைபெற்ற சமரஸ பேச்சுவார்த்தையில் சமர்ப்பிக்கப்பட்டது.

தொழிற்சங்க கூட்டுச்சபை மாதாந்த கொடுப்பனவுகளில் 150 ரூபா அதிகரித்தல், தொழிலாளர் விரோத சட்டங்களை நீக்குதல் போன்ற ஆறம்சக் கோரிக்கையை வலிவுறுத்தி ஆதரவு கோரியிருந்தது.

(6ம் பக்கம் பார்க்க)

1977 தேர்தல் காலத்துப் பேச்சுக் குறிப்புகள்:

"யாழ். பொலிஸாரின் தாமதத்துக்கு காரணம் என்ன?"

--கமிஷனர்

(கொழும்பு)

சன்சோனி விசாரணைக்கமிஷன் நேற்றுக்காலை இங்குமீண்டும் கூடியபொழுது, 1977ம் ஆண்டுத்தேர்தல் காலப்பேச்சுக்கள் தொடர்பாக கமிஷன் முன்பாக அறிக்கை சமர்ப்பிக்க, யாழ்ப்பாணம் பொலிசார் ஏன் மேலும் தாமதிக்கின்றனர் என்று கமிஷனர் சன்சோனி வினா எழுப்பினார்.

"1977ம் ஆண்டுத்தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பேசப்பட்டது தொடர்பாக இக்கமிஷன் முன்னிலையில் சாட்சிகள் சில விபரங்கள் தெரிவித்துள்ளனர். இது சம்பந்தமாக 1977ம்ஆண்டு தேர்தல் காலப்பேச்சுக்கள் பற்றிய பொலிசாரின் குறிப்புகள் எமக்குத்தேவைப்படுகின்றன. யாழ்ப்பாணம் பொலிசாரிடம் இது குறித்து பேச்சுக்குறிப்புகளடங்கிய அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரிக்கைவிடுத்து 2 வாரங்களாகியும் எமக்கு எந்தவிதமான பதிலும் அங்கிருந்து கிடைக்கவில்லை. யாழ். பொலிசார் ஏன் இவ்விதமாக தாமதம் எடுக்கவேண்டும்?" என்றுகுறிப்பிட்ட விசாரணைக் கமிஷனர் திரு. சன்சோனி, கமிஷன் முன்பாக பொலிசார் சார்பாகச் சமுகமளித்திருந்த உதவிப்பொலிஸ்அதிபர் திரு. வேர்ணன் டி சில்வாவைப் பார்த்து, "இது பற்றி நீங்கள் விளக்கம்அளிப்பீர்களா?"

(6-ம் பக்கம் பார்க்க)

ஆணைக்குழு இன்று கூடும்

(கொழும்பு)

ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழு இன்றுகாலை மீண்டும் கூடுகிறது. இன்று இரண்டு சாட்சிகள் குறுக்குவிசாரணை செய்யப்படுவார்கள்.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

செல்வச்சந்நிதி முருகன் ஆலய கோபுரத்தின் முன்வீதியில் அமைந்துள்ள ''மில்க்வைற்'' விளம்பர விற்பனைக் காட்சிச்சாலையில் ''மில்க்வைற்'' தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பையும், மேலுறைகளுக்கான அன்பளிப்புக்களும் வழங்கப்படும். மில்க்வைற்-யாழ்ப்பாணம். 0292

13-9-78 புதன்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய தேர்த்திருவிழாவை முன்னிட்டு ஆலய வீதியில் அமைக்கப்பட்டுள்ள விளம்பர, விற்பனை வாகனத்தில் ''மில்க்வைற்'' தயாரிப்புக்கள் யாவும் சகாய விலையில் விற்கப்படும். தயாரிப்புக்கள் வாங்கும் அன்பர்களுக்கு ''ஸ்ரீதுர்க்காதேவி அஷ்டகம்'' என்னும் பிரசுரமும், மேலுறைகளுக்கான பரிசில்களும் வழங்கப்படும். மில்க்வைற்- யாழப்பாணம். 0302

சணல் விதை விற்பனைக்குண்டு. V. வேலாயுதம் உடுவில் தெற்கு, சுன்னாகம். 0304

தேவை

எமது ஸ்தாபனத்திற்கு தையல்காரர் தேவை. சொந்த மெஷின் உள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். உரிமையாளர், வேல்முருகன் ஸ்ரோர்ஸ், கண்டிவீதி, கைதடி என்னும் முகவரிக்கு 20-9-1978 புதன் கிழமைக்குமுன் விண்ணப்பிக்கவும். 0301

நன்றி நவிலல்

அன்னலிங்கம்-மனோகரி

கடந்த 4-9-78ல் நடைபெற்ற எமது திருமணத்திற்கு வருகை தந்து ஆசிகள், அன்பளிப்புகள் வழங்கிய உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தனித்தனி நன்றிதெரிவிக்கமுடியாமைக்கு வருந்துகின்றோம். திரு-திருமதி அன்னலிங்கம் தம்பதிகள், 'இந்தன்' கட்டுவன் தெற்கு, ஏழாலை. 0306

தவறிவிட்டது

முழங்காவிலுக்கும் மன்னருக்குமிடையில் சங்குப்பிட்டி-மன்னார் வீதியில் இம்மாதம் 8ம் திகதி காலை 11 மணிக்கும் பகல் 1 மணிக்குமிடையில் விலைமதிப்பான பொருட்களைக்கொண்ட கறுப்பு நிறத்திலும் ஒறேஞ் நிறத்திலுமான 2 சூட்கேசுகள் காரிலிருந்து தவறி விழுந்து விட்டன. தகவல் அறிந்தவர்கள் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்குஅல்லது டாக்டர் திருமதி மகேந்திரன் மன்னார் ஆஸ்பத்திரி என்ற முகவரிக்கு அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 0303

மாதநடுப்பகுதியில் ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க உள்ளூராட்சி மன்றத்தினரின் ஓய்வூதியம் ஏனைய ஓய்வூதியர்களைப்போல் மாதநடுப்பகுதில் வழங்கப்படவிருக்கிறது.

இதுகாலவரையும் உள்ளூராட்சி மன்ற ஓய்வூதியருக்கு மாதஇறுதியிலேயே வழங்கப்பட்டு வந்தது.

ஓய்வூதியர் சங்கங்களின் முயற்சியினால் மாத நடுப்பகுதியில் ஓயவூதியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (க)

கூலி வேலையில்

படித்த வாலிபர்கள்

பரு. எம். பி. பாராட்டு

(நெல்லியடி)

பருத்தித்துறை தொகுதியிலுள்ள கவுடுவிராய் குளத்தில் நடைபெற்றுவரும் வேலைகளை பருத்தித்துறை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் நேரில்சென்று பார்வையிட்டார்.

குளத்தில் சம்பு புற்கள் வளர்வதினால் குளத்தினை உபயோகிக்கமுடியாதநிலையேற்பட்டது. சம்பு வேர்களை அடியோடு அகற்ற சேறு எடுக்கும் வேலைகள் நடைபெற்றுவருகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் இவ்வேலைக்கு ரூபா 20,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்குளவேலைகளைச்செய்து முடிக்க கூலியாட்கள் போதாமையால் பருத்தித்துறைத் தொகுதி படித்த வாலிபர்கள் வேலைசெய்யமுன் வந்துஉழைக்கின்றார்கள். அவர்களின் சேவையை க. துரைரத்தினம் எம். பி. பாராட்டியுள்ளார். (உ)

''ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர் மாவோ''

— காந்தி அபயசேகரா

(நெல்லியடி)

''70 கோடி மக்களின் இதயங்களில் குடிகொண்டிருந்த 20-ம்நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவர் மாவே அவர்கள் சீன தேசத்திற்கும் மக்களுக்கும் சொந்தமல்ல; எங்கெங்குஒடுக்கப்பட்டமக்களானபாட்டாளிகள்-விவசாயிகள் இருக்கின்றார்களோ அவர்களுக்கும் சொந்தமானவர்,''

மேற்கண்டவாறு கன்பொல்லையில் நடைபெற்ற சீனத்தலைவர் மா-சே-துங்கின் இரண்டாவது ஆண்டு நினைவுவிழாவில் காந்தி அபயசேகரா பேசுகையில் குறிப்பிட்டார்.

கரவை அமுதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழா மைதானம் செங்கொடிகளாலும் மறைந்ததலைவர் மாவோவினது உருவப்படங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

காந்தி அபயசேகரா மேலும் பேசுகையில்தெரிவித்ததாவது; மார்க்ஸிச-லெனினிசத்தை சரியான முறையில் நடைமுறைக்குக் கொண்டுவந்தவர் தலைவர் மாவோதான். ஒவ்வொரு நாட்டினரும் அந்தந்த நாட்டின் தன்மைக்கும் இயல்புக்கும் ஏற்றவிதத்திலேயே மார்க்சிச-லெனினிச சித்தாந்தத்தை வழிநடத்த வேண்டுமென்றார். இதனடிப்படையில்தான் ஜப்யானிய எதிர்ப்பு யுத்தத்தை நடத்தி வெற்றியும் கண்டார். லத்தீன் அமெரிக்க பிரதிநிதிகள் தலைவரைச் சந்தித்த பொழுதும் இக்கருத்தை அவர் வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையில்

இலங்கையில் இடதுசாரிகள் கின்னாபின்னப்பட்டுப்போவது விரும்பத்தக்கதல்ல. இன்று இடதுசாரிகள் என்று கூறிக்கொள்வோருக்குப்பின் ஐக்கிய தேசியக்கட்சி செயல்படுகின்றது.

மக்களின் நலன்கருதி சத்தியப் பிரமாணம் செய்யாமல் த. வி. கூட்டணியினரால் செயல்படமுடியுமா?''

மற்றும் ஈ. எம். சி இக்பால், கே. டானியல், க.செல்லத்துரை, செல்வபத்மநாதன், மு சனகரட்ணம், எம்.ராஜா ஆகியோரும் உரையாற்றினர்கள். (உ)

வலி கிழக்கு தென்பகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம்

ஸ்சூஸ் காப் மொடல் புதிய லொறி பொடி அடித்தலுக்கான

கேள்வி விண்ணப்பம்

ஷ புதிய லொறிக்கு புதிய பொடி அடித்தலுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் ரூபா 2/- மணிஓடர் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பியோ, நேரில் கொடுத்தோ விண்ணப்பப்படிவத்தையும் நிபந்தனைக் கொத்தையும் 20-9-78க்கு முன் பெற்ற 27-9-78க்கு முன் விண்ணப்பிக்கலாம்.

த. மயில்வாகனம்,
தலைவர்,
வலி. கிழக்கு தெ. ப. ப. நோ.கூ.சங்கம்,
நீர்வேலி.

1978-09-11 0300

பரு. எம். பி. தந்தி

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மருந்து கட்டும் துணிகளின் பற்றாக்குறையை உடனடியாக அகற்றுமாறு பிரதம சுகாதார அத்தியட்சகரை பருத்தித்துறைத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு க துரைரத்தினம் தந்திமூலங் கோரியுள்ளார்.

இம்மருந்து கட்டும் துணித் தட்டுப்பாட்டினால் இப்பகுதி அரசினர் வைத்தியசாலைகளுக்குச் செல்லும் கரவெட்டி கப்புது, கரணவாய், துன்னாலை, அல்வாய், புலோலி போன்ற பகுதிகளில் வாழ்வோர் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். (உ)

காடுவளர்ப்புத் திட்டம்

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள மணற்றரைகளில் காடு வளர்ப்பதற்கான திட்டமொன்றை பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் மேற்கொண்டுள்ளார்.

இக்காடுவளர்த்தல் மூலம் மழை வளத்தைப் பெருக்க முடியுமென்றும் இங்குள்ள சவுக்கு முதலிய மரங்களை வெட்டுவதைத் தடைசெய்ய வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். (உ)

புதிய தலைவர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக சங்கானை வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

உதவி கூட்டுறவு ஆணையாளர் வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவின் சிபார்சின் பிரகாரம் இந்நியமனத்தை வழங்கியுள்ளார்.

முன்னர் இச்சங்கத்தின் தலைவராக கடமையாற்றிய திரு. எஸ். சந்தையா தமது சுக வீனம் காரணமாக இராஜினாமா செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

'தமிழ்மக்கள் முழுமையான வாழ்வுபெற வழி என்ன?'

வி. பி. விளக்குகிறார்

(இணுவில்)

''நாம் பிறந்த சொந்தத் தாயகத்தைவிட்டு வாழ்வும் வளமும் நாடி வெளியில் சென்றோம். வர்த்தகம் வளர்த்த நம்மவர்கள் தெற்கிலேயே நிலைபெறத் தொடங்கினர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் முழுமையான வாழ்க்கை வசதிகளை நாம் பெறவும், பெருகி வரும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நாம் விரும்பினால் எமது பிரதேசங்களில் விவசாயத்துறையிலும், தொழில் துறையிலும் புதியமுதலீடுகளை எம்மவர்கள் செய்ய முன்வர வேண்டும்''

இவ்வாறு செந்தமிழர் இயக்க பொதுச்செயலாளரும் பிரபல அரசியல் பிரமுகருமான திரு. வி. பொன்னம்பலம் சுருவில் இளைஞர் சங்க 10 வது வருடாந்த விழாவில் மேற்படி சங்க மலரான 'இளைஞன்' சஞ்சிகையை ஆய்வுரை செய்தபோது ஒரு கட்டத்தில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது: இலங்கை எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு சுதந்திர வர்த்தகவலையத் திட்டமும் மகாவலி திசைதிருப்புத் திட்டமும் குறிப்பிடப்படுகின்றன.

தற்போது நாட்டில் 12 லட்சம் பேர் வேலைஅற்றுள்ளனர் இவ்வெண்ணிக்கை ஆண்டுக்கு இரு லட்சமாக அதிகரிக்குமானால் மேலும் 10 லட்சம்பேர் வேலை அற்றோராக மாறிவருவர். 5 ஆண்டுகளில் மகாவலித்திட்டம் நிறைவேறுவதானால் எதிரே வரும் ஒவ்வொரு ஆண்டுகளிலும் ஆறு ஆண்டு வேகத்தில் முன்னேற்றம் கண்டாலே அன்றி அரசின் 5 ஆண்டு காலம் முடியும்போது 30 ஆண்டுகளின் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியாது. அப்படித்தான் இத்திட்டம், நிறைவேறுவதாயினும், பூர்த்திஆனதும் இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலும் இரண்டரை லட்சம் பேர்குடியமர்த்தப்படுவர். 75 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்பும் கிட்டும்.

கடந்த ஓராண்டு கால எல்லைக்குள் சுதந்திர வத்தக வலயம் ஏற்படுத்தியுள்ளமுன்னேற்றம் இத்துறையில் நம்பிக்கையைஊட்டுவதற்குப் பதிலாக வெறும் ஏமாற்றத்தையே தந்துள்ளது.

வாழ்க்கைச் செலவு வேகமாகஉயர்வதற் குவிஷம்போல் ஏறும் விலைவாசிகள் காரணம் என்றும் பணவீக்கம் தற்காலிகமாக மிகவும் அதிகரித்தது பொதுமக்களை துன்புறுத்தும் இந் நிகழ்ச்சி தற்காலிகமானதாகவே அமையும் என்றும்

[6-ம் பக்கம் பார்க்க[

நடைபாதை வியாபாரிகள் கைது

(கம்பளை)

நடைபாதையில் வைத்து தேங்காய் வியாபாரம் செய்த பலர் நேற்று கம்பளை பொலிசாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டனர். பாதையில் வைத்து வியாபாரம் செய்வதால் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுவதனாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இங்கு இப்படி நடைபாதை வியாபாரிகள் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு பல தடவை கொண்டுவரப்பட்டுள்ளனர். (உ)

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. ஈடு/15169

முருகேசு செல்லையா கைப்பெண் பூபதி
இடைப்பிட்டி, காரை நகர்.

வாதி

எதிராக

1. வீரகத்தி கார்த்திகேசுவும் பெண்
2. சுந்தரமும் இருவரும்,
   8/4, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

பிரதிவாதிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் வழ. இல. ஈடு/15169-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 9-ந் திகதி (9-10-78) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 9898/- மேலும் ரூபா 8000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 14% வட்டியும் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1977-ம் ஆண்டு ஆடி மாதம் 25-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 600 சதம் 65ம் (இதில் நடைபெற்ற செலவு ரூபா 380/70 நடைபெறவேண்டிய செலவு ரூபா 121/05 சதம் மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 98 சதம் 80) கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று நல்லூர் இறை ''கலட்டி வளவும் சோமனுதி வளவும்'' இந்நீதிமன்ற P/530-ம் இலக்க வழக்கில் அணைக்கப்பட்டதும் 18-12-1962-ம் ஆண்டு உத்தரவு பெற்ற அளவுகாரன் C. S. வீரவேலுவால் வரைந்த 5601A இலக்கப் படத்தில் 4-ம் துண்டு இது. நில. பர. 4 குழி 4½ இதில் மேற்குப்பக்கமாக நில. பர. 2 குழி 4½ செய்பயிர்களும் வான்பயிர்களும் வீடும் குறித்த படத்தில் ''B'' அடையாளமிட்ட கிணற்றில் உள்ள பங்கும் எல்லை கிழக்கு எதிராளிகளுக்குரிய மீதக் காணி வடக்கு சந்தையா இராசதுரையினதும் பெண் நவமணியினதும் மறுபேரினதும் ஆதனம் மேற்கு குறித்த படத்தில் 2-ம் 3-ம் இலக்க துண்டுகள் தெற்கு குறித்த படத்தில் 5-ம் இலக்க துண்டு இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

ஏ. பி. பி. எதிர்மன்னசிங்கம்,
வெந்தீஸ் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

107, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்,
திகதி: 27-07-78. 0299

ஈழநாடு
The Eelanaadu

அமைச்சர் அவையில் தொண்டமான்

இந்நாட்டில் மிகப் பெரியதும் பலம்வாய்ந்ததும் உடலால் உழைக்கும் மக்களையே பெரும்பான்மை உறுப்பினர்களாகக் கொண்டதுமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் திரு. சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்கள் கிராம சிறுகைத்தொழில் அமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னர் இந்து பௌத்த ஸ்தலங்களுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்து கொண்டதுடன் சமயகுருமார்களின் ஆசிகளையும் பெற்றுக் கொண்டு தமது கடமைகளைச் செய்ய ஆரம்பித்திருக்கிறார்.

ஏறத்தாழ பத்துலட்சம் தமிழ் இன மக்களின் தலைவர் என்ற முறையிலும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவராக இருந்தவர் என்ற வகையிலும், தமிழர் விடுதலைக்கூட்டணியுடனான உறவுகளை முற்றாக முறித்துக் கொள்ளாத நிலையிலும் திரு. தொண்டமான் அமைச்சர் அவையில் இருந்து கொண்டு செயல்படும் முறையை நாட்டிலுள்ள சகலமக்களும் மிகஉன்னிப்பாகக் கவனித்துவருவார்கள் என்பதைக் கூறத் தேவையில்லை. வெளிநாடுகளிலும்கூட குறிப்பாக இந்தியாவில் அதுவும் தமிழ் நாட்டில் உள்ளவர்கள் திரு. தொண்டமானின் நடவடிக்கைகளை அக்கறையோடு அவதானிப்பார்கள்.

சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனத்தின் முக்கிய உறுப்பினர் என்ற வகையிலும்கூட அவரது நடவடிக்கைகளை அந்த ஸ்தாபனத்தின் உறுப்புநாடுகள் கவனிக்கக்கூடும். ஏனென்றால் கடந்தசுமார் 20 ஆண்டுகாலமாக மேற்படி ஸ்தாபனத்தின் பல்வேறு துறைகளிலும் குழுக்களிலும் திரு. தொண்டமான் இலங்கையிலுள்ள இந்திய இனத்தவர்களான தமிழ்த் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்டு வந்துள்ள இன்னல்களையும் கொடுமைகளையும் எடுத்துக் கூறி வந்துள்ளதுடன் ஆதரவையும் உதவிகளையும் கூடக் கோரிவந்துள்ளார்.

இப்பொழுது அந்த மக்களின் நலனுக்காகத் தாமே அமைச்சர் அவையிலிருந்து பணியாற்றக்கூடிய ஒரு சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்துள்ளது.

புதிய அரசியல் அமைப்புச்சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய அரசுப் பேரவைத் தெரிவுக்குழுவில் அங்கம்வகித்து திரு. தொண்டமான் சமர்ப்பித்த திருத்தங்களில் பலவற்றையும் அரசு ஏற்றுக் கொண்டு புதிய அரசியல் அமைப்பில் சேர்த்துக் கொண்டதை பெரும்பான்மைச் சமூகத்த தலைவர்களின் பெருந்தன்மையென்று கருதிய திரு. தொண்டமான், அமைச்சரவையில் சேர்ந்து பணியாற்றும்படி அவர்கள் கோரிக்கை விடுத்தபோது அதனைத் தமது மக்கள் நலனுக்காகப் பணிபுரிவதற்கான இன்னுமொரு சந்தர்ப்பம் என்ற நம்பிக்கையுடன் தாமும் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொண்டார்.

சுமார் 40 வருடகாலமாக இந்நாட்டில் சாதாரண மனித உரிமைகள் கூட இல்லாது, சகலராலும் வெறுத்து ஒதுக்கப்பட்ட நிலையில் வாயில்லாப் பூச்சிகளாக வாழ்ந்துவந்த இந்திய இனமக்களுக்குப் புதிய அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் அவர்களைப் பொறுத்தவரை பெரும் வரப்பிரசாதமாகவே கருதப்படுகிறது. கள்ளத்தோணிகள், நாடற்றவர்கள் என்றெல்லாம் ஏளனமாகப் பேசப்பட்டும் நடத்தப்பட்டும் வந்துள்ள இவர்கள் 'எமக்கும் இங்கு ஓர் இடம் உண்டு' என்று தலை நிமிர்ந்து தன்மானத்தோடு நடமாடக்கூடிய சந்தர்ப்பத்தை இந்த அரசமைப்பின் மூலம் பெற்றுவிட்டார்கள் என்று திரு. தொண்டமானும் அவரைப் போன்றவர்களும் மகிழ்ச்சியடைவதற்கு நியாயமிருக்கிறது.

ஆனால் ஒரு விஷயத்தை நாம் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியது அவசியம்.

திரு. தொண்டமான் அமைச்சர் என்ற முறையில் செய்யும் பணிகள் எவ்வாறு இருப்பினும் அரசமைப்பில் பொதுவாக தமிழ்பேசும் மக்களுக்கும், குறிப்பாக மலையகமக்களுக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமைகள், சலுகைகள் யாவும் எழுத்திலும் உணர்விலும் செயல்படுத்தப்படுவதற்கான உந்து சக்தியாக அவர் செயல்படவேண்டும் என்பதே அதுவாகும். அமைச்சர்பதவியை இதற்கு அவர் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே நமது விருப்பம். இல்லையெனில் சோல்பரி அரசமைப்பில் 29-வது ஷரத்து இருந்தும் பயனில்லாமல் போன நிலையே நீடிப்பதாக இருக்கும்,

'சிவபாதசுந்தரனார் முன் நாணித்தலைகுனிந்தேன்'

சைவப்பெரியார் நூற்றாண்டு விழாவில் பண்டிதமணி

[சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் கடந்த ஒன்பதாம் தேதி நடைபெற்ற சைவப்பெரியார் நூற்றாண்டு விழாவின்பிற்பகல் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கிய பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது.]

"சைவப் பெரியார் அவர்கள் சைவவித்தியா விருத்திச் சங்கத்துக்குத் தலைவராயிருந்தபோது, ஒருமுறை திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் நிர்வாகசபைக் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்துக்கு வந்த பெரியார் கூட்டம் நடந்தபின், புறப்பட்டுச் செல்லும்போது, இடையில், உப அதிபர் திரு. பொ. கைலாசபதி தங்கும் விடுதிக்கு, அவரைச் சந்திக்கும் நோக்கமாக வந்தார்கள். விடுதியில் நான் மாத்திரமே யிருந்தேன். பெரியாரின் வருகையைக் கண்டநான், பெரியாரை ஆசனத்தில் அமரச் செய்து அருகே ஒதுங்கி நின்றேன்.

'உப அதிபர் அவர்கள் வீட்டுக்குப் போயிருக்கலாம் என்றெண்ணுகிறேன்'' அதனையறிந்ததும் பெரியார் அவர்கள் மீண்டும் சென்றிருக்கலாம். தெய்வ சங்கற்பம் போலும் இரண்டொரு நிமிஷத்துக்கு என்னுடன் உரையாடினார்கள். உரையாடல் ஒரு வினாவுடன் தொடங்கியது. அவ்வினா, சமயம் படிக்கிறதோ! என்பது. என்னிலையை என்ன என்பது? மிகவும் நாணித்தலைகுனிந்து, 'இல்லை' என்று அணுங்கினேன்.

அப்பொழுது ஆச்சரியக்குறி தோன்ற அவர்கள் பார்த்த பார்வை இன்னும் என்மனத்திரையில் காட்சியளிக்கின்றது; தமிழ் படிப்பதுவேறெதற்கு? சமயம் படிப்பதற்குத் தானே என்ற கருத்து, அவர்களின் ஆச்சரிய பார்வையிற் படிக்கத் தக்கதாயிருந்தது. உடன்பாடு தெரிவிக்கும் நிலையில் மிகமிக வெட்கிநின்றேன். முதலில் திருவருட்பயன் படிக்கத் தொடங்கலாம் என்று சொன்னார்கள், சொன்னார்கள் என்று சொல்வது தப்பு. உபதேசித்தார்கள் என்றே சோல்ல வேண்டும். அவர்கள் அன்று இட்ட சமயவித்து, சமய சாதகர்களான உப அதிபர் அவர்களின் தண்ணிழலில் முளை கொண்டு வளர்வதாயிற்று.

பள்ளு முதலிய சிற்றிலக்கியப் பிரசங்கங்கள் கம்பராமாயணக் காட்சிகள் மறைந்தன. கந்தபுராணம் என்மனசிற் குடிபுகுந்தது.

ஒரு உதாரணம் சொல்லுகிறேன்.

வாலி ஸ்ரீராமன்மீது பக்தியுள்ளவன்; இராமனின் தர்மங்களைக் கேள்விப்பட்டவன் வனத்துள் கால்வைத்த அன்றே தாடகை தலைப்பட்டாள். விசுவாமித்திரர் விடுபாணம் என்றார். இராமனுக்குக் கைகூசியது. இப்படிப்பட்ட இராமன் தன்மேற் பாணம் தொடுப்பான் என்று கனவிலும் வாலி நினைத்ததில்லை. வாலி சுக்கிரீவனோடு யுத்தஞ் செய்யுஞ் சமயத்தில் மறைவிலிருந்து புறப்பட்டு இராமபாணம் வாலியின் மார்பை ஊடுருயது.

மகாபலசாலியான வாலி பாணத்தை இருகைகளாலும் இறுகப்பிடித்து இழுத்துக் கொண்டே 'இராமனுமா இது செய்தான்' என்ற எண்த்துடன், பாணம் வந்த திக்கை நோக்கினான் உடனே எதிரில் காட்சியளித்தான் இராமன். வாலி இராமனைக் காணவில்லை;

'கண்ணுற்றான் வாலிநீலக்
கருமுகில் கமலம்பூத்து
மண்ணுற்று வரிவில் ஏந்தி
வருவதுபோனும் மாலை'

இராமன்பால் சங்குசக்கரதாரியாக ஸ்ரீராமர் நாராயண மூர்த்தியைக் கண்ணுற்றான்; மரணநேரத்தில் தரிசித்தான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் 'இராமனுமா இது செய்தான்' என்ற பழிச் சொல் என்ன ஆகும்! இறைவனே, இராமன் மூலம் ஸ்ரீமந் நராயணனாய்க் காட்சியளிக்கின்றான் என்பதை உணர வல்லார் என்ன சொல்வார்? ஆட்பாலவர்க்கருளும் வண்ணம் அளவில்லையன்றோ!

ஆழ்வார் வரிசையில் வைத்துப் பேசும் கம்பர் என்ன செய்கின்றார் பெரியவம்பு செய்கின்றார்.

'எண்ணுற்றாய் என்செய்
தாயென்று ஏசுவானியம்
பலுற்றான்'

என்று வாலியைக் கொண்டு ஏசுவிக்கின்றார்.

மறைந்து நின்று பாணம் விடும்படி உன்குல முதலாகிய மநு சொன்னாரா? உன்மனைவியைப் பிரிந்ததால் உனக்கு மூளைக்கோளாறா? என்றெல்லாம் ஏசுவிக்கின்றார் கம்பர். வாலி இச்சந்தர்ப்பத்தில் ஏசுவான் தானோ?

வாருங்கள் கந்தபுராணம் பாடிய கச்சியப்பப் பெருமானிடம் விண்ணப்பிப்போம்.

சூரபத்மன் ஆதியர்கள் யுக யுகமாய்த் தமக்குப் பகையென்றொரு பண்டம் இருப்பதை அறியாதவர்கள்.

ஒருநாள் தாரகாசுரனின் நகரத்தில் போர்ப்பறை கேட்கின்றது. பூதங்களுக்கு மத்தியில் ஒரு பச்சைப் பாலகர் தோன்றுகின்றார். தாரகன் இறைவனைத் தவிரத் தமக்கு மேலே யாருமிருப்பதை அறியாதவன் பூதங்கள் அவனெதிரின் பூதாளி மாத்திரையாய் இருக்கும். தாரகன் புன்முறுவல்பூத்து அந்தப் பாலகரை உற்று நோக்குகின்றான்.

முழுமதியன்ன ஆறுமுகங்கள், முந்நான்காகும் விழிகளில் கருணைப்பிரவாகம், வேல் மற்றும் ஆயுதங்கள், அழகான பன்னிரண்டு பிஞ்சுத்திருக்கரங்கள், அணிமணித் தண்டையார்க்கும் அழகானமலர்ப்பாதங்கள். இந்தத் திருக்கோலத்தைத்தாரகன் கண்டான்.

வாலி கண்ணுற்றான்- தாரகன் கண்டான்.

முன்பின் அறியாத இந்தத் திருக்கோலத்தைக் கண்டான். அப்பால் என்ன நடக்கும் என்பது பிரச்னை; கச்சியப்பப் பெருமான் எந்தப்பிரச்னைக்கும் இடமில்லாமல் விடையிறுத்தருளுகின்றார்.

'அவன் தவம் செப்பற்பாற்றோ' என்பது அப்பெருமான் அருளிய விடை. தாரகன் முன்பின் அறியாதவனாயிருக்கட்டும். திருமுருகனைத் தரிசிக்கும் பாக்கியம் சாதாரணமானதா? அவன் தவம் இருந்தவாறு! அவன் பாதத்தைத் தொட்டுக் கும்பிடுங்கள் என்று சொல்லுவது போல, 'அவன் தவம் செப்பற்பாற்றோ' என்கின்றார்.

முருகனைத் தரிசித்த சூரபன்மனைச் சேவலும் மயிலும் போற்றி என்று பாடியவர் அவர்.

சூரபத்மன் முருகன் திருப்பெருவடிவத்தைக் கண்டபோது, தொழுதிடவேண்டும் கைகள்; சூழ்ந்திடவேண்டும் கால்கள்! துதித்திடவேண்டும் தாலு என்றவன் அதனை அறிந்து பாடியவர் கச்சியப்பப் பெருமான். இப்படிப்பட்ட கச்சியப்பப்பெருமானிடம் கம்பரை மெல்லக் கொண்டுவருவோம், வாலி அச்சந்தர்ப்பத்தில் அப்படிப் பேசுவானா என்று கேட்பிப்போம் கம்பர் வெறுங் கவிச்

[5-ம் பக்கம் பார்க்க]

மலையகம்

பிறருடைய சந்தோஷத்தைக்கண்டு நாமும் களிப்புறுதல் வேண்டும். ஆனால் பிறர் சங்கடப்படும் போது நாம் சந்தோஷப்படுவது பெரும் பகையை உண்டு பண்ணும்.

—ஸ்ரீஇராமகிருஷ்ணர்

சன்னதி முருகன் திருவிழா

இன்று 11-ம் நாள்

முழுவாழ்வின் பயன் தருவாய்

--- அ. நமசிவாயம் ---

பொங்கு மியற்கையெழில் தங்கியருள் கூட்டும்
சன்னிதிவாழ் சீராளா வேலவனே சண்முகனே
சிந்தைக் கினியவனே சீரெல்லாந் தருபவனே
முந்தைவினை யறுத்தே முழுவாழ்வின் பயன்றருவாய்

அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைவாகிப்
பொங்க மருள்பரப்பிப் பொலிந்துநீ இருந்திடினும்
மங்குறாக் கருணைமிக மிடியதனைப் போக்குதற்கு
பங்கமுறா வழகொழுகப் புரக்கின்றாய் இப்பதியில்

ஊர்பதியை யுனக்காக்கி உன்நாம முதலாக்கி
பேர்பெருகு மாந்தர்குலம் பெருகுநவம் பேணிமிக
வார்கழல்கள் வந்தித்தே வல்வினைக ளறுத்தற்கு
பார்செய்த தவப்பயனோ பரிந்திங்கே யுறைகின்றாய்

அகலாக் கொடுநோய்கள் அகற்றியருள் சரந்தே
பகலிரவாய்ப் பணிவாரைப் புவியதனில் வாழ்வித்தே
இகபர சுகத்தையெலாம் இனிதாகச் சேர்ப்பித்து
சுகமுடனே சுற்றமுநற் கீர்த்தியதும் தந்திடுவாய்

நெஞ்சினிலே நஞ்செனவே புகுந்தழிக்கும்
பொய்மைகளும்
அஞ்சாநே புன்நெறியிற் போய்மாழும்
பேதைமையும்
எஞ்சாதே விரைந்தழிப்பாய் எழிலார்திரு முருகா
வெஞ்சமரிற் சூர்கடிந்த வென்றிவளர் வேலவனே

ஈரேழு புவனமதை இனிதாகக் காக்கின்ற
பேராறு திருமுகமும் பீடுடைநின் கைவேலும்
ஓராதே யிவ்வுலகில் எவ்வுயிரும் இன்புறவே
போராடிப் பொருதமைதி குலையாமற் காத்திடுமே

அழுவாரை யழுதழுதே தொழுவாரை அங்குமிக
விழிவாரை உன்னடியே நினைவாக அன்புமிகப்
பழுவாய வினைநீங்கிப் பாவநெறி புறம்போக
வழுவாத பதம்நாடி வருவாரை நான்கண்டேன்

இப்பொழுது வாங்கலாம்
பிரவுண்சனின் இன்னுமோர் தரமான தயாரிப்பு
பிரவுண்சன் அரறூட்மா
Brownson
இறக்குமதிசெய்து விநியோகிப்பவர்கள்:
பிரவுண்சன் இண்டஸ்ரீஸ்
80 1/4 பிறைஸ் பிளேஸ்
கொழும்பு 12.
தொலைபேசி; 27197
Brownson
Arrowroot
POWDER
infants & invalids food
Aryaratne Veyangoda
பிரவுண்சன் அரறூட்
அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டது.

கேம்ப்டேவிட் மாநாடு:

பெகின் திருப்தி: எகிப்திய பிரதிநிதிகள் அதிருப்தி

மேரிலண்ட், செப் 11 மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பான கேம்ப்டேவிட் பேச்சுவார்த்தைகளில்நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது என்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் கருத்து வெளியிட்டுள்ளார்.

கேம்ப்டேவிட் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக முத்தலைவர்களில் முதல்கருத்து வெளியிட்ட தலைவர் இவரே,

இதேவேளை, இப்பேச்சுவார்த்தைகள் குறித்து எகிப்தியப் பிரதிநிதிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பேச்சுவார்த்தைகள் மகிழ்ச்சியளிப்பதாகஇல்லை என்று இப்பிரதிநிதிகள்கூறியுள்ளனர்

பேச்சுவார்த்தைகள் சாவகாசமானமுறையிலேயே நடைபெறுகின்றன என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. [உ]

"இராணுவச் சட்டம் அமுலாகும்"

ரொடீஷியப் பிரதமர் அறிவிப்பு

ஸாம்பியா, மொஸாம்பிக்குக்கு எச்சரிக்கை

லண்டன், செப்.11

இராணுவச்சட்டம்ஒன்றினை அமுல்செய்ய விருப்பதாக ரொடீஷியப்பிரதமர் திரு. இயன் ஸ்மித் அறிவித்துள்ளார்.

யுத்த நடவடிக்கையை வலுப்படுத்தும வகையில்அணி திரட்ட புதிய இம்முறை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ரொடீஷியாவுக்கு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள மொஸாம்பிக், ஸாம்பியா ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு திரு.ஸ்மித் எச்சரிக்கை ஒன்றினையும் விடுத்தார்.

கொரில்லாக்களின் நடவடிக்கைகள் தொடர்ந்தால் ரொடீஷியா பதிலடி கொடுக்கத்தயங்காது என்றும், இதனால் விளையும் பலாபலன்களை ஸாம்பியாவும் மொஸாம்பிக்குமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தமது எச்சரிக்கையில் குறிப்பிட்டார்.

புதிய இராணுவ சட்டம் எப்போது நடைமுறைக்குவருமென்று திரு ஸ்மித் தெரி[illegible] (உ)

"கலர்ப்படத் தயாரிப்பு:

ஹிந்திப் படங்களுடன் போட்டியிட வேண்டும்"

அமைச்சர் வீரப்பன் விருப்பம்

சென்னை, செப்.11

'கலர்ப்படத் தயாரிப்பில் ஹிந்திப்படங்களுடன் தமிழ்ப் படங்கள் போட்டியிடவேண்டும்.'

இவ்வாறு தமிழ்நாடு, தகவல்,ஒலிபரப்புத்துறைஅமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் விழாவில் பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

மத்தியஅரசு கலர்ப்படங்களுக்கான பிலிமை சீராக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது இவ்விடயத்தில்மத்தியஅரசு பாரபட்சமாக நடந்துகொள்கிறதா என்ற சந்தேகம் ஏற்படுமென்றும் அமைச்சர் சொன்னார்.

தமிழ்நாட்டில் சினிமாத் தொழில் மிகச்சிறந்த தொழிலாகக் கருதப்படுவதால் இத்தொழிலை மதித்து நடந்தால் மேலும்ஒளி கிடைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (உ)

உற்சவம்

(பண்டத்தரிப்பு)

பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி கோவில் வருடாந்தமகோற்சவம்இம்மாதம் 6ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இம்மாதம் 15ம் திகதி வெள்ளிக்கிழமையன்றுதேர்உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (அ(

முதன் மாணவி

[மட்டக்களப்பு]

கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய மாணவி செல்வி விஸ்வாஜினி விஸ்வலிங்கம் வித்தியாலயத்தின் முதன்மை மாணவியாகத் தெரிவுசெய்யப்பட்டுப் பரிசளிப்புவிழாவில் பாராட்டப்பட்டுள்ளார்.

இவர் 12 வயதுக்குட்பட்டவர்களுக்கிடையே பேச்சுப் போட்டி, திருக்குறள் மனனப் போட்டி, ஆங்கிலம் சொல்வதெழுதல் போட்டி, வகுப்பு நிலை, கூடியவரவு,விளையாட்டு இவற்றில் முதன்மை மாணவிராக தெரிவு செய்யப்பட்டுக் குகளரவிக்கப்பட்டார். இவர் யட்டக்களப்பு தாமரைக் மகணி விஸ்வலிங்கம் தம்பதிளேின் கனிஷ்ட புதல்வியாகவார்.

"நாவலரின் திருப்பணியை தொடர்ந்து நடத்தியவர்"

(யாழ்ப்பாணம்)

"நாவலர் அவர்கள் அத்திவாரமிட்ட திருப்பணியைத் தொடர்ந்து நடத்தியவர்; பருச்சமய ஊடுருவல்களை விரட்டியடித்துசைவத்தைப்பரப்பி நிலைபெறச் செய்தவர் சைவப் பெரியார் சு. சிவபாதசுத்தரனார்."

இவ்வாறு நேற்றுமுன்தினம் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரிமண்டபத்தில் நடைபெற்ற 'சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரின் நூற்றாண்டு விழாவின் காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப்பேசுகையில் திரு. சிதம்பரப்பிள்ளை கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது 'சிவபாதசுந்தரனார் சைவப் பெரியார் மாத்திரமின்றி ஆசிரியப் பெரியாருமாவார். அத்தோடு நல்லொழுக்கம், நற்பண்பு, சிக்கனவாழ்வு, கடவுள்பக்தி முதலியவற்றையும் மாணவரிடையே வளர்த்தவர் பழைய குருசிஷ்ய முறையில் வழிதவறிச் சென்ற பல மாணவர்களை நல்வழிப்படுத்தியவர். அவர் அதிபராக இருந்த சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஓர் சீர்திருத்த கழகமாக விளங்கியது என்று கூறுவது வெறும் புகழுரையன்று. கால்நூற்றாண்டுக்குப் பின்னும்; இங்கும், பல நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள பழைய மாணவர்கள் இன்றும் அவரை நினைத்து நெஞ்சுருகி அஞ்சலி செலுத்துவதே இதற்குச் சான்றாகும்." (கூ)

கரிபூசிவந்து கொள்ளை

(வவனியா)

முகத்தில் கரிபூசியவர்கள் சைக்கிளில் தனியாக வந்தவரை மறித்து கைக்கடிகாரத்தைப் பறித்தனர். வவனியா புதுக்குளத்தில் வசிக்கும் க. பாக்கியம் என்பவர் சைக்கிளில் தனியாக வீடு நோக்கி வரும்போது முகத்தில் கரிபூசிய இருவர் இவரை மறித்து பயமுறுத்தி அவரது கைக்கடிகாரத்தையும் 20 ரூபா பணத்தையும் பறித்துக் கொண்டுகாட்டுக்குள் ஓடிவிட்டனர். பட்டப்பகலில் நடந்த இச்சம்பவம்பற்றி வவனியா பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது. (உ)

இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 27-ந் திகதி செவ்வாய்க்கிழமை

(12-9-78)

மேடம்:- இதயத்தில் மகிழ்ச்சிவெள்ளம் பொங்கும். இனசனம் கூடுவர். புத்திர சுகத்துடன் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும்.

இடபம்:- பகைவர்கள்பதுங்குவர். பாதையில் தடைகளுண்டு. நம்பிக்கை மோசடி மூலம் பணமும்பறிபோகலாம். நிதானம் வேண்டும்.

மிதுனம்:- இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும். இல்லம் பல்கலைக் கழகமாக மாறும். அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும். களஸ்திரவழியாலும் கண்ணியம் சேரும்.

கடகம்:- அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம். தன்கையே தனக்குதவி என்று செயலாற்றுக. மறைமுக எதிரிகள் விஷமத்தனங்களில் ஈடுபடுவார்கள். நிதானம் வெற்றியைத் தரும்.

சிங்கம்:- நீண்ட காலத்தின் பின்பு இன்று மனதுக்குப் பிடித்த ஒரு சம்பவம் இடம் பெறும். முதியவர் ஒருவர் உமக்கு வழிகாட்டியாக இருப்பார். நல்ல தினம்.

கன்னி:- பூமி விருத்தியுடன் புதிய தொடர்புகளும் பெருகும். அரசாங்க ஊழியராயின் உத்தியோக உயர்வுக்கு இடமுண்டு. சிலர் வாழ்க்கையில் வெளிநாட்டுப் பயணமும் மேற்கொள்ளப்படலாம்.

துலாம்:- முயற்சியின்மூலம் முதலிடத்தைப் பிடித்துக் கொள்வீர்கள். பணவரவுக்கு இடமுண்டு உற்சாகமளிக்கும் செய்தியொன்று கிடைக்கக்கூடும். வியக்கத்தக்கசெய்தியொன்று நிலைநாட்டப்படபடலாம்.

விருச்சிகம்:- சீறிவரும் கோபம உங்களை நிலைதடுமாற வைக்கும். அடக்கமும், செலவீனங்களைம் கட்டுப்படுத்தும் மனப்பான்மையும் வேண்டும்.

தனுசு:- துன்பத்தின் ரேகைகள் படரும். எதற்கெடுத்தாலும் சீறிவிழுவிர்கள். கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றம் அடைய நேரிடும். தொழில்துறையிலும் தொல்லைகள் தோன்றிமறையும்.

மகரம்:- பேச்சு வன்மையால் பிறருடைய நன்மதிப்பைப்பெறுவீர்கள். கல்வித் துறையில் திருப்திகரமான முன்னேற்றம் உண்டு. சிலருக்குஅதிஷ்டலாபமும் கிடைக்கலாம். சிறப்பான தினம்.

கும்பம்:- தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்த கால எண்ணங்கள் தலைதூக்கும். சகோதர வழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு. பொறுமைநன்று

மீனம்:- வாழ்வில் இன்று வெற்றித்திருநாளாகும். எதிலும் அதிஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும். புதியபொருட்கள் கொள்வனவுசெய்வதற்கு நன்று. வெளியிடத் தொடர்புகளும் சிறப்பைத் தரும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு புதிய கட்டிடம் நிறுவுதற்காக மானிப்பாய் தொகுதி எம்.பி. திரு. வி. தர்மலிங்கம் ஐயாயிரம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்திலிருந்துவழங்கியுள்ளார். இதைத்தவிரஆனைக்கோட்டையிலுள்ள பழம் றோட் திருத்த வேலைகளுக்காக 10 ஆயிரம் ரூபாவையும் திரு தர்மலிங்கம் ஒதிக்கியுள்ளார். (உ)

கொழுப்பில் தேசிய விழா

இலங்கை புதியஅரசிலமைப்புச் சாசனத்தைக் குறிக்கும் முகமாக இம்மாதம் 8-ம் திகதி கொழும்பு காலிமுகத்திடலில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா தலைமையில் மாபெரும் தேசிய விழா நடைபெற்றது.

விழா மாலை 3-30 மணியளவில் ஆரம்பமானது. விழா ஆரம்பத்தில் இலங்கையின் பல பாகங்களைச் சேர்ந்த பள்ளிக்கூட மாணவ, மாணவிகள் கலந்துகொண்ட விளையாட்டுகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதியும் அவரது பாரியாரும் பரிசு வழங்கினார்கள்.

பின் ஆயிரக்கணக்கில் காலிமுகத்திடலில் மக்கள் மத்தியில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா உரையாற்றினார்.

இன்று அமுலாக்கப்பட்டிருக்கும் புதிய அரசியலமைப்புச் சாசனம், மக்களின் சுதந்திரத்தையும், சகல இன மக்களின் அந்தஸ்தையும் பாதுகாக்கும் விதத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் மூலம் தனிமனிதனின் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டு, பொது மக்களின்உரிமைகளும்சுதந்திரமும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்புச் சாசனத்தின்படி எந்தக்கட்சியும், நமது ஐக்கிய தேசியக் கட்சிகூட ஆறு ஆண்டுகளே ஆட்சி செய்யமுடியும். அதற்கு மேல் ஆட்சியை நீடிக்க கட்சி விரும்பினால் அதை பொது மக்களின் அனுமதியுடனேயே நீடிக்க இயலும்.

அவசரக் காலச்சட்டத்தைப் பயன்படுத்தி ஆட்சியைநீடிக்க முடியாதா? என்று சிலர் சந்தேகப்படலாம். அவசரகாலச் சட்டத்தை அமுலாக்குவதாயின், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பாராளுமன்ற அங்கத்தவரின் பூரண அனுமதியுடனேயே நாம் அதைச் செய்யலாம். எனது கட்சி நிச்சயமாக ஆறு வருடங்களில் தேர்தலை நடத்தும் என்று நான் உறுதியளிக்கிறேன்'.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா உரையாற்றியதைத் தொடர்ந்து பிரதமர் ஆர். பிரேமதாஸ உரையாற்றினார். அவரது உரையில், இந்தநாடு ஒரு தனி மனிதனுக்கோ, கட்சிக்கோ, இனத்திற்கோ உரிமையானதல்ல. இந்தநாடு, சிங்கள, தமிழ், பறங்கி, முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் சொந்தமுடையது. இந்நாட்டில் வாழும் அனைவரும் இந்நாட்டு மன்னர் என்று உரிமை கொண்டாடலாம்.

இங்கே பிறந்த அனைவரும் சுதந்திரமாகவும், சுயமாகவும், உரிமைகளுடனும் வாழ புதிய அரசியலமைப்பு துணைபுரிகிறது. நாம் அனைவரும் இன, மத வேறுபாடுகளை ஒதுக்கி, நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டால் இன்னும இரண்டு, மூன்று வருடத்தில் இலங்கையை ஒரு சொர்க்க பூமியாக மாற்றலாம் என்கு நம்பிக்கை எனக்கு உண்டு.

இவர்களது உரையைத் தொடர்ந்து இலங்கைத்தகவல் ஒலிபரப்பு அமைச்சும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனமும் இணைந்துநடத்திய தேசிய இசை, நடன விழா நடைபெற்றது.

விழாவில், டபிள்யு ஆர். அமரதேவ, மொஹிதீன்பெக், குலசீலநாதன், முத்தழகு, கலாவதி சின்னச்சாமி, சுஜாதா அத்தனாயக, எச். ஆர். ஜோதிபால, அஞ்சலின் குணதிலக, கணபதிப்பிள்ளை, ருக்மணிதேவி, கோகிலா, சுபத்தித்திரா சகோதரிகள், எம். எஸ். பெர்ணாண்டோ, விக்டர் ரத்னாயக்கா போன்ற பிரபல பாடகர்கள் பாடினார்கள். கண்டி நடனம் உட்பட பலவித நடனங்களும் நடைபெற பல ஆயிரக்கணக்கானோர் அவற்றைக் கண்டுகளித்தனர்.

---எஸ். சுந்தரதாஸ்

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
Friday Foster

நாகம்ஸ்
(கல்லூரம்)
தினசரி 6-45, 10-00
சிவாஜி—மஞ்சுளா
மன்னவன் வந்தானடி

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி
ராமன் எத்தனை ராமனடி

வெற்றி முரசு கொட்டும் 2வது வாரம்!
போன்: 7642.
சாந்தி தினசரி 10-15, 2-15, 6-15, 10-00
(யாழ்நகர்) ரஞ்சன், ரி. ஆர். ராஜகுமாரி நடித்த
சந்திரலேகா (புத்தம் புதிய பிரதி)

தினசரி 4 காட்சிகள்
ராணி சிவாஜி-மஞ்சுளா நடித்த
(யாழ். நகர்)
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் - தேவிகா
நடித்த
சாந்தி

ராஜா தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-விஜயகுமார்
(யாழ். நகர்) ஜெய்சித்ரா-தங்கவேலு
பொண்ணுக்கு தங்கமனசு
(புதிய பிரதி)

REGAL Jaffna 5th&LASTCROWDEDWEEK
Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING
All passes and Concessions Suspended

விஸ்லர் போன்: 466 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) முத்துராமன்-லதா-சோ
சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 8 காட்சிகள்
சனி,ஞாயிறு 4 காட்சிகள்
இது சத்தியம்

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) தாய்க்குத்தலைமகன்

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) டி.ஆர்.மகாலிங்கம்-குமாரிருக்மணி
ஸ்ரீ வள்ளி

காளான் உற்பத்தி

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் காளான் உற்பத்தி செய்யப் படவுள்ளது. பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் இக்காளான் உற்பத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

சிறந்த புரதஉணவானகாளான் இந்நாட்டுமக்களின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாகப் பெருமளவில் உற்பத்தி செய்யமுடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது இறைச்சி மீன் ஆகியவற்றின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளதால் அவற்றிற்குப் பதிலாகக் காளானைப் புரத உணவாகப் பயன்படுத்தலாமென்றும் வீடுகளில் சிறிய அளவில் காளானை உற்பத்தி செய்யலாமென்றும் அவர் கூறினார்.

'வியட்நாமியர் வெற்றியை பறிக்க சீனா முயற்சி'

செந்தமிழர் இயக்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அடிமைப்பட்டிருந்த வியட்நாம் விடுதலை பெற்றுத் தலை நிமிர்ந்து வாழத்தொடங்கியுள்ள ஆரம்ப காலத்திலேயே சீனா அதனுடன் முரண்பட்டு நெருக்கடிகளை உருவாக்கிவருகின்றது. விலைமதிப்பற்ற தியாகத்தின் அடிப்படையில் வியட்நாம் மக்கள் பெற்ற வெற்றியை அவர்களிடமிருந்து பறித்தெடுப்பதற்கான-அவர்களை மீண்டும் அடிமைப்படுத்துவதற்கான ஒரு சூழ்ச்சி இது.''

இவ்வாறு சீன-வியட்னாம் தகராறு தொடர்பாக செந்தமிழர் இயக்கத்தின் மத்திய குழு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

இவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

தனது நடவடிக்கைகளுக்கு நியாயம் தேடும்வகையில், வியட்நாமில் வாழும் சீன மக்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள் என்று சீனா கூறுகின்றது. இது உண்மைக்குப் புறம்பான ஒரு குற்றச்சாட்டு. ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக இயங்குவதை மூடிமறைப்பதற்கான ஒரு முயற்சியாகவே வியட்நாமில் வாழும் சீன மக்களைப்பற்றிப் பேசப்படுகின்றது.

இந்தோனேஷியா, மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கோடிக்கணக்கான சீனர்கள் மிகுந்த இன்னல்களுக்கு மத்தியில் வாழும் நிலைமையைப்பற்றிச் சீனா வாய்கூடத் திறக்கவில்லை, கம்போடியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆயிரக்கணக்கான சீன மக்களைச் சகோதர உணர்வுடன் ஏற்று வாழ்வளித்தது வியட்நாம். இன்று அதே கம்போடியாவின் உதவிக்காகப் படைகளை அனுப்பவும் சீனா தயாராக இருக்கின்றது!

வியட்நாமில் வாழும் சீன மக்கள் வியட்நாமியர் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனுபவித்து வாழ்கின்றனர். பலர் பொறுப்புவாய்ந்த அரசாங்க உத்தியோகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் பல்வேறு மட்டங்களில் பொறுப்பான பதவிகளுக்குப் பல சீன மக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பூரண விடுதலைக்கு முன்னர் தென் வியட்நாமில் பெருவணிகராயும் தொழிலதிபர்களாயும் பல சீனர் வாழ்ந்தனர். விடுதலைக்குப் பின்னர் பொருட்தட்டுப்பாடுகளை ஏற்படுத்தியும் விலைகளை உயர்த்தியும் இவர்கள் புதிய அரசுக்கு நெருக்கடிகளை உருவாக்க முயன்றனர். இதனால் பெருந்தொழில்களையும் வர்த்தகங்களையும் அரசாங்கம் தேசவுடமையாக்கியது. தாம் அனுபவித்துவந்த ஏகபோக வாய்ப்புகளை இழந்த இக்கூட்டம் வியட்நாமில் வாழும் சீன மக்கள் (ஹுவா மக்கள்) மத்தியில் நச்சுப் பிரசாரத்தில் ஈடுபடத்தொடங்கியது. சீன அரசாங்கத்தின் உதவி ஒத்தாசையுடன் ''கம்போடியாவுக்குச் சீனா உதவுவதால் வியட்நாமில் சீனர்களுக்குத் தொல்லைகள் ஏற்படும்'' என்று இவர்கள் அவிழ்த்துவிட்ட பிரசாரத்தை அப்பாவி சீனர்களில் ஒரு பகுதியினர் நம்பத்தொடங்கினர். சீன அரசாங்கமும் அதற்கேற்றாற்போல நடந்துகொண்டது. இம்பொய்ப்பிரசாரத்தை நம்பிச் சீனாவுக்குச் சென்ற பல ஹுவா மக்கள் மீண்டும் வியட்நாமுக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

வியட்நாம் தொடர்பாகச் சீனா பின்பற்றும் போக்கு புதியதல்ல. ஹுவா மக்களின் பிரச்னை தொடர்பாகவே வியட்நாமுடன் முரண்பாடு ஏற்பட்டதென உலகுக்குக் காட்டுவதற்குச் சீனா எவ்வளவு தான் முயன்றபோதிலும் வரலாறு அதன் முகமூடியைக் கிழிக்கின்றது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே 1973 ம் ஆண்டு இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது ''வியட்நாமுக்கு சீனா அளித்துவரும் திருப்பிக்கொடா உதவி 1973 ம் வருடத்தில் கொடுக்கப்படும் தொகை மட்டத்தில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் வழங்கப்படும்'' என சூ என்லாய் உறுதி கூறினார். ஆனால் 1975 ம் ஆண்டுக்குப் பின் அவ்வுதவி வழங்கப்படவில்லை.

தென் சீனக் கடலில் வியட்நாமுக்குச் சொந்தமாயுள்ள சில தீவுகளுக்கு உரிமைகோரி வியட்நாம் விடுதலையடைவதற்கு முன்னரே சீனா யுத்தக் கப்பல்களை அனுப்பியது.

''தென் வியட்நாம், தாய்லாந்து, பர்மா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய தென்கிழக்காசியப்பகுதியை நாம் பூரணமாக உடைமை கொள்ளல் வேண்டும்'' என்று 1965 ஆகஸ்ட் மாதத்தில் மாசேதுங் கூறினார்.

வியட்நாம் தொடர்பாகச் சீனா பின்பற்றும் நடவடிக்கைகளை இப்பின்னணியில் ஆராய்ந்து பார்க்கும்போது சீனாவின் பேரினவாதக் கொள்கை தெளிவாகப் புரிகின்றது. (உ)

தற்கொலை

(யாழ்ப்பாணம்)

சாராயத்துக்கு மேல் கிருமிநாசினி பருகிவிட்டு வீதியில் அந்தரித்துக் கொண்டிருந்தவரை குருநகர் காரொன்றில் ஏற்றி பொலிசார் யாழ்ப்காணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர் அங்கு அவர் மரணமானார்.

யாழ்ப்பாணம் சுச்சமோட்டையைச்சேர்ந்த நாலுபிள்ளைகளின் தந்தையான ராசா யோகராசா என்பவரே இவ்வாறு மரணமானார்.

சம்பவதினம் மதுஅருந்துவதற்காக வீட்டில் காசு கேட்டார் என்றும் வீட்டில் காசு கொடுக்காததால் முத்த மகளை அழைத்துச் சென்று மகளின் தோட்டைக்கழற்றி விற்று அந்தப்பணத்தில் 34 ரூபாவுக்கு கிருமிநாசினி வாங்கியதாகவும் குருநகர் சாராயத்தவறணைக்கு அண்மையில் இவர் சாராயத்தை குடித்துவிட்டு பின்னர் கிருமிநாசினி பருகியதாகவும் சுருட்டுத் தொழிலாளியாகிய இவர் நித்தமும் மதுஅருந்துபவரென்றும் மரணவிசாரணையின் போதுதெரிவிக்கப்பட்டது

யாழ். நகரதிடீர் மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ். எஸ். பிரான்சிஸ் தற்கொலையென தீர்ப்பளித்தார். (கூ)

சிவபாத....

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

சக்கரவர்த்தி. கச்சியப்பர் திருவருட்சக்கரவர்த்தி. கச்சியப்பர் முன்னிலையில் கம்பரின் கவித்துவம் எம்மாத்திரம்!

ஒரு காலத்திலே கம்பர் முன்னிலையில் கச்சியப்பர் எம்மாத்திரம் என்று எண்ணியதுண்டு.

சைவப்பெரியார் அவர்கள் திருவருட்பயன் படி என்று அன்று செய்த உபதேசம் என்னைத் தலைகீழ் செய்துவிட்டது. திருவருட்பயனில், 'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்' என்ற ஒரு பாடலே சைவசித்தாந்தம் போதிக்கப் போதியதாகும்.

1. எல்லாச்சமயமும் இருப்பது நீதி என்று கொள்வது சைவசித்தாந்தம், இதே சமயத்தில் அவற்றில் வேறுமாயிருப்பது சைவசித்தாந்தம். ஒன்றோடொன்று மாறுபடுகின்ற எல்லாச் சமயமுமாய் அவற்றின் வேறுமாயிருப்பது என்பது கருத்து, நீதிவேறு: சமத்துவம்வேறு.

இவ்வாறே சில குறிப்புக்கள் பின்வருமாறு:-

2. சைவசித்தாந்தம் வேதாந்தத்தெளிவு.

வேதாந்த சூத்திரம் செய்தவர் வியாசர், அது உத்தர மீமாம்சைஎனவும் படும். அதற்குப் பல வேறு பாஷியங்கள் உண்டு. பாஷியங்களைக் கொள்ளாதவர்கள் வேதாந்த சூத்திரம்செய்த வியாசரை வெறுப்பது தவறு.

3. வேதாந்திகள்என்றுதம்மைச் சொல்லிக்கொள்பவர்கள் பிரஸ்தானத்திரயம் பேசுபவர்கள். பிரஸ்தானத் திரயம் மேல்நிலையடைவிக்கும் மூன்று நூல்கள். மேற்குறிப்பிட்ட வேதாந்த சாத்திரம் பிரஸ்தானத் திரயத்திலொன்று மற்றவை உபநிஷதமும் கீதையும். உபநிஷதம் வேத சிரசு. கீதை பாரத இதிகாசத்தில்உள்ளது. இவைகளை அவ்வம் மதத்தவர்கள் செய்த பாஷியத்தை விலகி நோக்கினால், சைவத்துக்குப காரமானவைகள் என்பதை அறியலாம்.

4. பிரஸ்தானத் திரயம் போல, சிவஞானபோதம் சித்தியார் பிரகாசம் திருவருட்பயன் நான்கையும் பிரஸ்தான சதுட்டயம் எனலாம். அவ்வாறு கூறுதற்கு உரை வேண்டியதில்லை.

இப்பிரஸ்தானச் சதுட்டயத்தோடு சங்கற்ப நிராகரணமும், இருபா இருபஃதும் சேர்த்து ஆறும் படிக்கவேண்டியவைகள்.

5. வைதிக சைவசித்தாந்தத்தின் மூலத்துவம் அத்வைதம். இறைவன் ஆன்மாவோடு அநாதியிலேயே அத்துவிதப்பட்டிருக்கிறான், அவ்வாறே ஆன்மாவும் இறைவனோடு அத்துவிதப்படவேண்டும். அத்வைதப்படுதற்கு வந்தஉபகார நிலை சகலாவஸ்தை.

6. சுத்தாவஸ்தையில் ஆத்மா இறைவனோடு அத்துவிதப்படும், அந்நிலையே சுத்தாத்துவத சைவசித்தாந்தப் பரமுத்தி.

''அவன்தானாய் அத்துவித
மானபடி மாசகன்று
தானவனாய் அத்துவித
மாகுநா ளெந்நாளோ?''

அவன் இறைவன். தான் ஆத்மா.

7. 'பொய்கண்டார் காணாப்
புனிதமெனும் அத்துவித
மெய்கண்டார்' என்பது

தாயுமானவர் வாக்கு, 'புனிதமெனும் அத்துவிதம்' சுத்தாத்துவிதம்,

இங்கே ஏழு குறிப்புகள் காட்டப்பட்டிருக்கின்றன. இவை விசாரித்தறியவேண்டியவைகள்.

சைவப்பெரியார் அவர்களின் ஞாபக தினத்தில் மேற்காட்டிய குறிப்புக்கள் மனத்திரையில் எழுகின்றன. அவைகள் ஆத்மசாந்தியளிப்பவைகள். சைவப்பெரியார் அவர்கள் அன்றொருநாள் தூண்டுதல் செய்துசெய்த உபதேசத்தின் பெறுபேறுகள் இவை.

அவர்களுக்கு வணக்கம் செய்வோமாக.

அப்பெரியார் அவர்களின் விழாவுக்குத் தலைமைவகிக்க நான் எம்மாத்திரம்என்றெண்ணும்போது அவர்களைச் சந்தித்தபோதுண்டான நாணநிலை உண்டாகின்றது.

பருத்தித்துறை சம்பளப் பணம் கொள்ளை:

அடையாள அணிவகுப்பு நடத்துவதா? இல்லையா?

நீதவான் நாளை முடிவுசெய்வார்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரி ஆசிரியைகளின் சம்பளப்பணம் கொள்ளை வழக்கு தொடர்பான அடையாள அணிவகுப்பை பாதுகாப்பு காரணமாக யாழ்ப்பாணத்தில் நடத்த அனுமதிக்குமாறு பொலிஸ் தரப்பில் கோரினர். அதேசமயம் அடையாள அணிவகுப்பை நடத்தக் கூடாதென்று சந்தேக நபர்களாள தமிழ்இளைஞர்சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஆட்சேபித்தனர்.

அடையாள அணிவகுப்பை நடத்துவதா? இல்லையா? என்பது பற்றி பருத்தித்துறை நீதவான் கே. ஞானச்சந்திரன் நாளை 13ம் தேதி காலை தீர்ப்பளிப்பார்.

சந்தேக நபர்கள் ஆஜராகவில்லை

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்றுக்காலை இவ்வழக்கு கூப்பிடப்பட்டபோது, சந்தேக நபர்கள் எவரும் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவில்லை.

சந்தேக நபர்கள் சார்பில், சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) சட்டத்தரணி எம். வேலும் மயிலும், சட்டத்தரணி ஆர். சிறிசிவாயா, சட்டத்தரணி என். கிருஷ்ணராசா சட்டததரணி அருமைநாயகம் ஆகியோரும் இன்னும்பலரும் ஆஜராஞர்கள்.

பொலிஸ் தரப்பில் உதவி பொலிஸ்அதிபர் நிகால்சில்வா சப் இன்ஸ்பெக்டர் ஜெயசேகரா ஆகியோர் ஆஜராஞர்கள்

நீதிமன்றத்திற்கு உள்ளேயும். வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

பாதுகாப்பு காரணங்களுக்காக யாழ்ப்பாணத்தில் அடையாள அணிவகுப்பை நடாத்த அனுமதிக்குமாறு உதவி பொலிஸ் அதிபர் சில்வா நீதவானிடம் கோரிஞர்.

4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இன்னும் இரண்டுசந்தேகநபர்கள் கைதுசெய்யப்படவேண்டியிருப்பதாகவும் திரு. சில்வா கூறிஞர்.

'பி' அறிக்கையில் மற்ற இரு சந்தேகநபர்களின் பெயரும் குறிப்பிட்டப் படடிருக்கிறதா? என்று சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) கேட்டபோது பெயர் குறிப்பிடப்படவில்லைஎன்று ஏ.எஸ். பி. சில்வா கூறிஞர்.

பெயர்கள் வெளியிடமுடியாது

அந்த சந்தேகநபர்கள் இருவரும் யார் என்று சொல்ல வேண்டும் என்றுசட்டத்தரணி ஜி. ஜி.பொன்னம்பலம்கேட்டபோது அப்பெயர்களை வெளியிட்டால், விசாரணைக்கு முட்டுக்கட்டை ஏற்படுமென்றும் அதஞல் கூறமுடியாதென்றும் ஏ. எஸ். பி. கூறிஞர்.

அப்பெயர்களை பொலிசார் வெளியிடாவிட்டால் சில வீடுகளுக்கு பொலிசார் சென்று வீட்டிலுள்ளவர்களை துன்புறுத்துவதை நிறுத்தவேண்டுமென்று நீதவான் கட்டளையிடவேண்டுமென்று சட்டத்தரணி பொன்னம்பலம் கேட்டுக்கொண்டார்.

துன்புறுத்துகின்றனர்

யார்வீட்டிற்கு போஞர்கள்? என்று நீதவான் கேட்டபோது புலோலி கிழக்கிலுள்ள வீடு ஒன்றுக்கு போய் பொலிசார் சோதனையிடுவதாகவும் அங்குள்ளவர்களை துன்புறுத்தியதாகவும் அவ்வீட்டிலுள்ளவர்களை தேவையாஞல் பொலிசார் இப்போது சொல்லிவிட வேண்டுமென்றும் அவர் கூறிஞர்,

அதுபற்றி இப்போது சொல்ல முடியாதென்று ஏ. எஸ். பி. கூறியதும் அந்த வீட்டிற்கு இனிமேல் போகக் கூடாது என்றும் அப்படிப் போவதாஞல் சேர்ச்வாரண்ட் பெற்று செல்லவேண்டும் என்றும் நீதவான் கட்டளையிட்டார்.

சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) கூறியதாவது;

''அடையாள அணிவகுப்பு நடத்துவதில் பலன் இல்லை. 2 தமிழ் இளைஞர்களை பொலிசார் இங்கிருந்து கொழும்புக்கும், பின்னர் கண்டிக்கும், அங்கிருந்து குருநாகலுக்கும் கூட்டிச் சென்று பின்பு மற்றொரு தமிழ்இளைஞரையும் கைதுசெய்து ஜீப்பில் கொடிகாமம் கூட்டிவந்தார்கள். குருநாகலிலிருந்து வேறு 3 பேரை ரயிலில் கூட்டிவந்தார்கள். இப்படி பல இடங்களுக்கு கொண்டுசெல்லப்பட்டனர். இந்தநிலையில் அடையாள அணிவகுப்பு நடத்துவதில் பிரயோசனமில்லை 28ம் தேதி பொலிசார் அடையாளஅணிவகுப்பு நடாத்த கேட்டனர். 2கிழமையாகியும் நடத்தவில்லை. ஒரு தடவையல்ல, இரு தடவையும் அணிவகுப்பு நடத்தியிருக்கலாம். அணிவகுப்புக்கு காரணங்களை காட்டவில்லை''

சட்டத்தரணிகள் வாதம்

சட்டத்தரணி எம். வேலும் மயிலும் கூறியதாவது; ''பொலிசார் சந்தேகநபர்களை கொண்டு சென்றது சரிவர சட்டப்படி நடக்கவில்லை. இனிமேல் வாக்குமூலங்களைப் பதிவுசெய்யும் போது சட்டத்தரணிகளுக்கு தெரிவிக்கவேண்டும்.

சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயா கூறியதாவது; சந்தேகநபர்களை பொலிசார் சட்டத்தின்படி, சரிவர கொண்டுசெல்லவில்லை. சந்தேகநபர்களுடன் பொலிசார் மாத்திரம் சென்றுள்ளனர். பிஸ்கால் உத்தியோகத்தர் செல்லவில்லை.

சில சட்ட தீர்மானங்களை நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஸ்ரீசிவாயா எடுத்து அவற்றை சுட்டிக்காட்டினர்.

நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன், சட்டத்தரணிகளின் வாதங்களை பதிவுசெய்துபின்னர் இம்மாதம் 13ம் தேதி காலை 11 மணிக்கு முன்னர் பொலிசார் சகல விபரங்களையும் கொண்ட அறிக்கையொன்றை தாக்கல்செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டார்.

அடையாள அணிவகுப்பு

அந்த அறிக்கையையும் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலங்களையும் படித்தபின்னர், அடையாளஅணிவகுப்பு நடத்துவதா? இல்லையா? என்று தீர்மானிப்பதாகவும், அப்படி அணிவகுப்பு நடத்துவதென முடிவுசெய்தால் 13ம் தேதி மாலை, அல்லது 14ம் திகதி காலை யாழ்ப்பாணத்தில் அடையாள அணிவகுப்பு நடத்துவதென்றும் நீதிபதி தெரிவித்தார்.

சந்தேகநபர்களை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) கோரிய போது, தான் இப்போது அதனைப் பற்றித் தீர்மானிக்கவில்லையென்றும் 14ம் தேதி வாக்குமூலங்களை பதிவுசெய்த பின்னர் அதுபற்றி தீர்மானிப்பதாகவும் நீதிபதி கூறி, வழக்கை நாளை காலைவரை ஒத்திவைத்தார். (க)

ரூபா 44,000

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் வசதிகருதி வவனியா மேல்நீதிமன்றத்தில் அனுராதபுரம் மேல்நீதிமன்ற நீதிபதி திரு. முனமாலே முன்னிலையில் விசாரணைக்குப் போடப்பட்டது.

கொலை வழக்கு முடியவில்லை

இவ்வழக்கு வவனியா நீதிமன்றத்தில் இருமுறை கூப்பிடப்பட்டு தவணைபோடப்பட்டு இன்னும் முடிவுறாத நிலையில் உள்ளது.

செம்மணி பரராசா துப்பாக்கிச்சூட்டு நஷ்டஈடு வழக்கு, யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. (க)

தமிழ் தொழிற்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் ஊழியர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக சம்பள உயர்வு, பதவி உயர்வுகள் தடைசெய்யப்படக்கூடாதென்ற கோரிக்கையை ஏழாவது கோரிக்கையாக சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று தமிழ்த் தொழிற் சங்க கூட்டணி வலியுறுத்தியுள்ளது. இத் தீர்மானம் தொழிற்சங்க கூட்டுச்சபையின் அங்கீகாரத்துக்கு இப்பொழுது அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

இக்கோரிக்கையை தொழிற் சங்க கூட்டுச்சபை ஏற்கும்பட்சத்தில், தமிழ்த் தொழிற்சங்க கூட்டணியும், இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கமும் வேலை நிறுத்தத்தில் குதிக்கும். (கெ)

துர்க்காதேவி ஆலயதேர்விழா வானொலியில் அஞ்சல்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தேர்த்திருவிழா நாளை புதன்கிழமைகாலை நடைபெறுகிறது.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தினர், தேர்த்திருவிழா நிகழ்ச்சிகளை நேர்முக அஞ்சல் செய்கின்றனர்.

துர்க்காதேவி முற்பகல் அழகுதேரில் ஆரோகணித்து பவனிவருவார். பிற்பகல் 3 மணிக்கு நவசக்தி அருச்சனையும், 4 மணிக்கு அம்பாள் அருள்நடன பதனியும் இடம்பெறும்.

இணுவில் தர்மசார்தா குருகுல மாணவர் வேத பாராயணம் ஓதுவார்கள். வி. ரி. வி. சுப்பிரமணியம், என். ஆர். திருஞானசம்பந்தன், எஸ். திருநாவுக்கரசும் திருமுறை ஓதுவார்கள். மற்றும் பக்திப் பாடல்களும் விசேஷ மங்களவாத்தியங்களும் இடம்பெறவிருக்கின்றது.

பகல் 12 மணி தொடக்கம் 3 மணிவரை அன்னதானமும் வழங்கப்படவிருக்கிறது. (ஈ)

யாழ். பொலிஸாரின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என்று கேட்டார். இதற்கு திரு. வேர்ணன் டி. சில்வா பதிலளிக்கையில், இதுகுறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு தாம் உடனடியாக அறிவிப்பதாகக் கூறிஞர்.

தேரோ சாட்சியம்

சன்சோனி விசாரணைக்கமிஷன் நேற்றுக்காலை கூடிய போது, யாழ்ப்பாணம் நாக விகாரையைச் சேர்ந்தவரும் யாழ், சிங்களமகாவித்தியாலயத்தின் பட்டதாரி ஆசிரியருமான வேரம்புவே விமலபாரத தேரோ சாட்சியமளித்தார்.

''1972ம் ஆண்டுமுதல்நான் யாழ்ப்பாணத்தில் வசித்துவருகின்றேன். ஒருவருடம் யாழ் நாகவிகாரையில் தங்கியிருந்தேன். இராசாவின்தோட்டத்தில் 1975ம் ஆண்டு குத்தகைக்கு ஒரு காணி வாங்கியிருந்தேன். பின்னர் கலாச்சார அமைச்சின் அனுமதிபெற்று, இக்காணியில் ஒரு பௌத்த நிலையத்தை 1976 மார்ச் 20ம் திகதி நிறுவினேன்'' என்று தமது சாட்சியத்தை ஆரம்பித்த விமலபாரத தேரோ மேலும் கூறியதாவது:

தர்மசாலையை எரித்தனர்

''1977ம் ஆண்டு ஜூலை மாதம் 5ம் திகதி, தமிழர் விடுதலைக்கூட்டணியினரின் ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டம் முடிந்ததும் சில இளைஞர்கள், இந்த பௌத்தநிலையத்தின் ஒரு பகுதியான தர்மசாலையை எரித்தனர். இச்சம்பவம் நிகழ்ந்தபோது நான் நித்திரையாகியிருந்தேன். பக்கத்து வீட்டுக்காரர்கள் தான் என்னை எழுப்பி தர்மசாலை எரிவது பற்றிக் கூறிஞர்கள். ஆகஸ்ட் கலவரத்துக்கு கூட்டணிதான் காரணமாக இருந்திருக்கிறது. கூட்டணித் தலைவர்களிஞல் இளைஞர்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றார்கள். பௌத்த நிலையம் தீ வைக்கப்பட்டதால் பத்தாயிரம் ரூபா நஷ்டமேற்பட்டது. இதுசம்பந்தமாக ஒரு மனுவை கொழும்புக்கு தபால்செய்தேன். இரண்டாவது மனுவை யாழ்ப்பாணத்தில் கையளித்தேன். ஆஞல் யாழ்ப்பாணத்தில் யாரிடம் யார்மூலம் கொடுத்தேன் என்பது நினைவு இல்லை''

சட். பார்லட்: நீர் ஒரு ஆசிரியர், உமக்கு ஞாபக மறதி வரலாமா?

சாட்சி: மறதி எல்லோருக்கும் பொதுவானதுதான்''

''ஆகஸ்ட் 24ம் திகதி நான் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி செப்டம்பர் மாதம் 12ம் திகதி யாழ் திரும்பினேன். 13ம் திகதி யாழ் பொலிசில் போய் முறையிட்டேன் பயத்திஞல் நான் உடனடியாக பௌத்த நிலையம் தீ வைப்புப்பற்றி பொலிஸாரிடம் முறையிடவில்லை'' என்று சாட்சி கூறிய போது சட்டத்தரணி பார்லட் குறுக்கிட்டு,

சட்டத்தரணி சவால்

''யாழ்ப்பாணத்தில் பௌத்த நிலையம் தீவைக்கப்பட்டது சம்பந்தமாக பொலிஸ்அறிக்கையில் ஒன்றுமே இல்லை. ஆகஸ்ட் 18ம் திகதிக்கும் செப்டம்பர் 15-ம் திகதிக்குமிடையே பௌத்த நிலையம் எரிக்கப்பட்டது குறித்து பொலிஸாருக்கு எந்தவித முறைப்பாடும் வரவில்லை. இன்ஸ்பெக்டர் குருசாமிகூட இதுபற்றிக் குறிப்பிடவில்லை, இதனை ஒரு சவாலாக விடுகின்றேன்'' என்றார்.

சட். பார்லட்: இரண்டாவது மனுவை யாழ்ப்பாணத்தில யாரிடமோ கையளித்ததாக சாட்சி கூறுவது முழுப்பொய். இந்தத் தபாலில் சொழும்பு முத்திரை குத்தப்பட்டுள்ளது.

சாட்சி மேலும் கூறியதாவது:

தேர்தல் காலத்தில்

''தேர்தல் காலத்தில் திரு. யோகேஸ்வரனை ஆதரித்து வெளியிடப்பட்ட ஒரு துண்டுப்பிரசுரத்தில் ''சிங்களப் பேய்களை எரிப்பதற்குரிய போராட்டத்தில் குதிப்பதற்கு 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளும் பெண்களும் தரண்டு வருக'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரசுரத்தை ஜெயராசா அச்சிட்டு கொட்டடி விமலரத்தினம் வெளியிட்டுள்ளார். (துண்டுப பிரசுரத்தைக் காட்டுகின்றார்) இப்மாதம் 7ம், 8ம் திகதிகளில் பாடசாலைக்குச் செல்ல வேண்டாமென்று தமிழர் கூட்டணியினர் சண்முகா அச்சகத்தில் ஒரு துண்டுபபிரசுரம் அச்சடித்து பயமுறுத்தியுள்ளனர் அன்று யாழ். சிங்கள மகாவித்தியாலயம் மட்டும் தான் இயங்கியது. வேறு பாடசாலைகள் நடக்கவில்லை, 8ம் திகதி கொழும்பு வைபவத்தில் யாழ் சிங்கள மகாவித்தியாலய மாணவர்களும், வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளும் கலந்துகொள்வதாக இருந்தது ''கொழும்புக்கு போஞல் திரும்பமாட்டார்கள்'' என்று பயமுறுத்தப்பட்டதஞல் வேம்படி மாணவிகள் வரவில்லை,

மார்பைத் தொட்டு

'1976ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி நான் வீதியால் சென்றுகொண்டிருந்தபோது ஒருவர் எனது மார்பைத் தொட்டு; ''நீர் சிங்களவர். விரைவில் இங்கிருந்து வெளியேறவேண்டும்'' என்று கூறிஞர்''

சன்சோனி குறிப்பு

ஒருகட்டத்தில், கமிஷன், தலைவர் சன்சோனி சாட்சியைப் பார்த்துக் கூறுகையில்' ''யாழ் நாகவிகாரை பிரதம தேரோ இங்கு கூறிய சாட்சியத்தை நான் எவ்விதமாக அவதானித்து ஏற்றுக்கொண்டேஞே, அதே மாதிரித்தான் உமது சாட்சியத்தையும் ஏற்கவேண்டிவரும்; ஏற்பேன்'' என்று குறிப்பிட்டார். (ம)

தமிழ்மக்கள்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

அரசவட்டாரங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசு கையாளும் புதிய யுக்தி, விலை இருந்தபடியிருக்க நிறைகுறைக்கும் முறையே ஆகும். இத்துறையில் பாண் விலை சீமெந்துப்பக்கெட்டின் விலை போன்றவரிசையில் பெற்ரோலின் விலையும் சலனுக்குப பதிலாக லிற்றரில் நிர்ணயித்து விலையை நிதானப்படுத்திஞல் ஆச்சரியபடுவதற்கு எதுவும் இல்லை'' (ச-உ)

''ஈழத் தமிழரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளார். இச்செய்கை மூலம், தமிழர்களைப் பிரிக்கும் முயற்சியில் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனஞ வெற்றிபெற்றுள்ளார்''. (கெ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால யாழ்ப்பாணம்சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ம் திகதி அச்சிட்டு வெவியிடப்பட்டது.

The Eelanaadu Post Box 49, Telegram Eelanaadu' Telephone 389 Registred as a Newspaper in Srilanka